வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 3294 /அ3/2021 நாள். 07.02.2022

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – **கூடுதல்** சிறப்புக் கட்டண இழப்பீட்டுத் தொகை – அரசு / நகராட்சி / அரசு உதவி பெறும் (சுயநிதி பிரிவு தவிர்த்து) உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு 2021–2022ஆம் கல்வியாண்டிற்கான கூடுதல் தேவைப்பட்டியல் கோருதல் – சார்பு.

பார்வை :

1. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 026245/ ஜி2/ இ3/ 2021, நாள். 27.10.2021.
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக்கல்வி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 026245/ ஜி2/ இ3/ 2021, நாள். 07.01.2022.

********

பார்வை1இல் காணும் செயல்முறைகளின்படி, வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகராட்சி/ அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு 2021–2022ஆம் கல்வியாண்டிற்குத் தேவைப்படும் சிறப்புக்கட்டண இழப்பீட்டுத்தொகை EMISஇல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்பட்டது.

பார்வை2இல் காணும் செயல்முறைகளின்படி **கூடுதல்** மாணாக்கர்கள் சேர்க்கை இருப்பின், தேவைப்படும் கூடுதல் தொகைக்கான மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரங்களை இணைப்பிலுள்ள படிவங்களில் பூர்த்தி செய்து 08.02.2022 நண்பகல் 01.00 மணிக்குள் இவ்வலுவலக **அ3** பிரிவில் ஒப்படைக்குமாறு அரசு/ அரசு நிதியுதவி/ நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம் //
க.முனுசாமி
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்

இணைப்பு – படிவம். 1,2,3

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து அரசு/ நகராட்சி மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்